இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலஉதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வட்ட செயலாளர் எஸ்.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ, வ.பெ சுரேஷ், இரா. செந்தில்குமார், மு.கோபி ஆகியோர் முன்னிலையில் கொரியர் பி.முருகன், இரா. பாலன், எம்.எல்.ரவி, ஜெ. கௌரீஸ்வரன், பாலா லட்சுமணன், பி.கண்ணன், ஆர். வி.கணேஷ், ரெயின்போ விஜயகுமார், சு.திருஞானம், எம். கே.இஸ்மாயில், கு.ரமேஷ், இ.மலையம்மாள், இ.மதன், ஆகியோர் வரவேற்புரையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, சைதை சாதிக், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் சிறப்புரையாற்றி நலஉதவிகள் வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்த்து

கடலூர் கிழக்கில் விடுபட்ட வாக்காளர்களை சேர்த்திடவேண்டும்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், டிச.25-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 21.12.2025, ஞாயிற்றுக் கிழமை, மாலை 4 மணியளவில், காட்டுமன்னார்கோயில் எம்.ஆர்.கே. கூட்டரங்கத்தில், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் சிறப்புரையாற்றினார்.

கோ.ஐயப்பன் எம்.எல்..ஏ., மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன், தொகுதி பார்வையாளர்கள் அங்கயற்கண்ணி, சுவை.சுரேஷ், விஜயன் ராமகிருஷ்ணன், எம்.எம்.சிவா, அ.பாரிபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியலில் கழக பொறுப்பாளர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் முழுமையாக பட்டியல் விபரங்களை பார்க்க வேண்டும். விடுபட்டு போனவர்களின் இருப்பிடத்தையும், நமது குடும்பத்தினர் வாக்குரிமையையும் முறையாக பார்த்து தேவையில்லாத திணிப்பாக ஏதேனும் இருந்தால் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், என வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது. உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட கழக துணை செயலாளர்கள்: அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத், ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்துசாமி,வி. சிவக்குமார்,தங்க.ஆனந்தன்,கே.ஆர்.ராயர், முத்து. பெருமாள், ஏ.எஸ்.மதியழகன், த.ஜெயபாண்டியன், ஆர்.நாராயணசாமி, கே. ஆர்.கோவிந்தராஜ், எஸ். செந்தில்குமார், தெ.காசிராஜன்,பி.சுப்பிரமணியன்,கே. ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், ஏ.எம்.மதியழகன், மு.வெற்றிவேல், வி.ஜி. பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.பி.பாலு, பா.திருமாவளவன், பி.சுந்தரபாண்டியன், ஆர்.கலையரசன், எம். மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன், ம.சோழன், வி. கோவிந்தசாமி,கே.மகேஷ்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், நகர கழக செயலாளர்கள் கே.ஆர். செந்தில்குமார், த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், கிள்ளை ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்தரம், மஞ்சு, பா.கோதண்டபாணி, மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி. வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி,தருமர்.பழனிசாமி,

பேரூர் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு.வே.ப.ஜெய்சங்கர், ப.மனோகரன், பூ.செல்வகுமார், க.பழனி, தேன்மொழி சங்கர், கே.ஜெயச்சந்திரன்,கே.சுரேஷ், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்:

மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன், பொறியாளர் அணி அப்புசந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி. அருள்ஜோதி, ஆதிதிராவிடர் நல்லக்குழு ஆர்.பரந்தாமன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ. ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், அயலக அணி வாசு, இலக்கிய அணி ஜி.குமாரராஜா, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்ச்செல்வன், வி.எம். வெற்றிச்செல்வன், உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டுக்கு உட்பட்ட பிராமின் தெருவில் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையான மழைநீர் வடிகால் அமைப்பதற்கான பணியினை கழக தேர்தல் பணிக்குழு செயலாளரும், வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் தொடக்கி வைத்தார். வட்ட கழக செயலாளர் ஜி.பி.எஸ்.பாலசதீஷ், உதவிச் செயற்பொறியாளர் பிரேமா, உதவி பொறியாளர் உசேன், குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர்கள் அன்பு, சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கு. காசிநாதன்
டிசம்பர் 25 (1991)

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை இளமைக் காலம் முதல் தனது இறுதிக் காலம் வரை கடைபிடித்து வந்தவர்.

கழகம் துவங்கிய காலத்திலேயே கொடுங்கையூர் பகுதியில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

கிளைச் செயலாளராகவும், புழல் ஒன்றிய அவைத் தலைவராகவும், பின்னர் கொடுங்கையூர் சென்னை மாநகராட்சிக்குள் இணைந்த போது பெரம்பூர் 1வது வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பாசிச வழித்தடம்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் VBGRAM G சட்டமாகும்!

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டம் (Mahatma Gandhi National Rural Employment Guarantee Act MGNREGA)

பிரதமர். மன்மோகன் சிங் முதல்முறையாக பிரதம அமைச்சராகப் பொறுப்பேற்ற காலகட்டமான 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் ஐந்தாம் தேதி நிறைவேற்றப்பட்ட சட்டமாகும். இந்த சட்டத்தினுடைய நோக்கம் இந்திய அரசியல் சட்டத்தின் 41வது பிரிவின் படி, மக்களின் "வேலைக்கான உரிமை" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் (Right to work) உருவாக்கப்பட்டதாகும்.

இந்தச் சட்டம் உருவாக்கிய திட்டத்தின் மூலம் இந்திய ஒன்றிய பகுதியில் வாழும் கிராமப்புற ஏழை மக்கள் பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான செலவினங்களை முறையே ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் 90:10 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் என வரையறுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பும், அவர்கள் சார்ந்த குடும்பங்களின் பொருளாதார பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொள்வதிலும், இந்தத் திட்டத்தின் பயன் கிராம மக்கள் மத்தியில் பாராட்டத்தக்க அளவில் பயன்பட்டது என்பதை யாராலும் மறுக்கவியலாது. இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்மை கணிசமாகக் குறைக்கப்பட்டு, கிராமப் பொருளாதார சூழல் சற்று வளர்ச்சியடைவதற்கும் இந்தத் திட்டத்தின் பலன் பயன்பட்டது.

ஆனால், இன்றைய ஒன்றிய பா.ஜ.க அரசு இந்த சட்டத்தின் மூலம் கிராமப்புற மக்கள் பெற்றிடும் பயனையும், பாதுகாப்பையும் சிதைக்கும் திரைமறைவுத் திட்டத்தோடு இந்த சட்டத்திற்கு மாற்றாக புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் உரிய விவாதமின்றி நிறைவேற்றி, குடியரசு தலைவரின் ஒப்புதலோடு சட்ட வடிவம் பெற்றிருக்கிறது. மகாத்மாகாந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டம் என்பதற்கு மாற்றாக (Rozgar Ajeevika Mission(Gramin) (VBGRAMG) சட்டம் அவசரகதியில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டம் முன்பு அமலில் இருந்த மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளை முற்றிலுமாக மாற்றியிருக்கிறது.

பொன்.முத்துராமலிங்கம்,
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

இந்தப் புதிய சட்டம் குறித்து நாடு தழுவிய எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் முறையில் ஒன்றிய வேளாண் துறை அமைச்சர், சிவராஜ் சிங் சௌக்கான் காணொளி மூலம் விளக்கங்களை தந்துள்ளார். மேலும் ஒன்றிய வேளாண்துறை அமைச்சர் எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் நியாயமானதல்ல. மாறாக, குழப்பங்களை உருவாக்குகிறது என்று குற்றம்சாட்டுகிறார். ஒன்றிய அமைச்சர் தன்னுடைய விளக்கத்தில் மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் புதிய புதிய வேலைகள் மட்டும் தான் கண்டறிய வேண்டும். ஆனால், தற்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய சட்டமான (VBG RAMG) இந்த சட்டத்தின் மூலம் மக்களுக்கான பயன்பாடு இதில் உள்ளதா என்பதை ஆய்வுசெய்து பின்னர் செயல்படுத்துவதுதான் இந்த திட்டத்தினுடைய நோக்கமாகும்.

குறிப்பாக, தண்ணீர் பாதுகாப்பு கிராமப்புற உள் கட்டமைப்பு, வாழ்க்கை வசதிகள் தொடர்பானதாகும். இதற்கான ஒன்றிய மாநிலங்களின் முறையே நிதிப்பங்கீடு 6040 சதவிகிதமாகும். இந்தப் புதிய திட்டத்திற்காக 1,51,282 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஒன்றிய வேளாண்துறை அமைச்சரின் இந்த விளக்கம் கிராமப்புற மக்களுக்கு மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு உத்திரவாத திட்டத்தைவிட, வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்திட முடியும் என ஒன்றிய அமைச்சர் தெரிவித்தாலும், இந்தப் புதிய சட்டத்தின் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அரசியல் ஆதிக்கத்தை எதிர்க்கட்சிகள் ஆட்சியிலுள்ள மாநிலங்களில் நிலை நாட்டி ஆம்! அச்சுறுத்திப் பணிய வைப்பதிலும், பா.ஜ.க. ஆட்சியிலுள்ள மாநிலங்களில் தங்கள் செல்வாக்கை மேலும் உயர்த்திக் கொள்வதற்குமான ஒரு திரைமறைவு நயவஞ்சக ஏற்பாடாகத்தான் இந்த சட்டத்தை மதிப்பீடு செய்ய முடியும்.

இன்னும் தெளிவாகவும், சுருக்கமாகவும் இந்த சட்டம் குறித்து விமர்சிக்க வேண்டுமானால், எதிர்க்கட்சிகள் ஆட்சி புரியும் மாநில அரசுகளையும், மக்களையும் பழிவாங்குவதற்கான உள்நோக்கம் கொண்ட சட்டம்தான் என உறுதியாக கருதலாம். இந்த சட்டத்தினுடைய உள்நோக்கம் குறித்து உடனடியாக கருத்து தெரிவித்த தமிழக முதல்வர் ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட இந்த சட்டத்தை ஒன்றிய அரசிற்கு அழுத்தம் கொடுத்து திரும்ப பெற வைப்போம் என்று உடனடியாக உறுதிப்பட தெரிவித்துள்ளார்கள்.

இந்தப் புதிய சட்டத்தினை விமர்சித்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற குழுத்தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்கள் "இந்து" ஆங்கில இதழில் 22.12.2025 ஆம் நாள் மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு திட்டத்தின் மீது திடீரென நடத்திய "ராட்சதத் தாக்குதல்" (The bulldozed demolition of MGNREGA) என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை தீட்டியுள்ளார்கள்.

மகாத்மா காந்தியின் கனவுத்திட்டமான "சர்வோதயா" (Welfare of all) திட்டத்திற்கான அரசியல் சட்ட வடிவம்தான் மகாத்மாகாந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டமாகும் (MGNREGA). இந்திய ஒன்றியத்தின் விடுதலைக்கான மையப் புள்ளியாகவும், இந்திய நாட்டின் தந்தை என்று போற்றப்பட்டவருமான மகாத்மா காந்தியின் இந்தக் கனவுத் திட்டம் மதவெறியர்களால் சிதறடிக்கப்படுகிறது என்றால், இனிவரும் காலங்களில் மதவெறி சக்திகள், அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி எத்தகைய தீயவிளைவுகளையும் உருவாக்கத் தயங்கமாட்டார்கள் என்ற உண்மையை அனைத்து மக்களும், வேறுபாடுகளை புறந்தள்ளிவிட்டு, நாட்டின் ஒற்றுமை உணர்வோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தத் திட்டம் கிராமப்புறங்களிலே வாழக்கூடிய மக்களை வறுமையின் கோரப்பிடியில் இருந்து மீட்கும் மனிதாபிமான நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட சட்டம்தான் இந்த மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு உறுதி சட்டம். அன்னை சோனியா காந்தி தன்னுடைய கட்டுரையில் இந்த சட்டம் பற்றி குறிப்பிடுகையில், இது உலகிலேயே மிகப்பெரிய அளவில் சமூகப் பாதுகாப்பை (Social security) உருவாக்கிய சட்டம் என்று அனைவராலும் கருதப்பட்டது என்றும் இந்தச் சட்டத்தின் அமலாக்கத்தின் மூலம் கிராமப்புறங்களில் வாழக்கூடிய மக்கள் மத்தியில் ஒரு புதிய எதிர்கால நல்வாழ்க்கைக்கான தொடக்கமாகவும் அமைந்தது என்று கருதப்பட்டது.

அன்னை சோனியா காந்தி கட்டுரையில், இந்திய ஒன்றியத்திற்கும், அதன் ஒற்றுமைக்கும், ஜனநாயக மதச்சார்பற்ற ஆட்சிமுறைக்கும் எதிர்காலத்தில் பேராபத்தை விளைவிக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியினுடைய திரைமறைவு திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு சட்டங்களும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்துத்துவா கோட்பாட்டின் அடிப்படையில் இந்து ராஷ்ட்ரத்தை உருவாக்கும் திடமான திட்டத்துடன் மதவெறி அமைப்பான "ராஷ்ட்ரிய சுயம்சேவக்சங்கும்", பாரதிய ஜனதா கட்சியும் இணைந்து அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் பிரதிநிதித்துவ மன்றங்களில் உரிய விவாதங்களுக்கு இடமளிக்காமல் தொடர்ந்து பல்வேறு சட்டங்களை நிறைவேற்றுவதும் நடைமுறையில் உள்ள பல்வேறு சட்டங்களை தங்களது திட்டங்களுக்கேற்ப மாற்றியமைப்பதுமான நடைமுறையை தொடர்ந்து பின்பற்றி வருகிறது.

அந்த முயற்சியின் ஒரு கட்டம்தான் மகாத்மா காந்தியின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத சட்டத்தினை நீர்த்துப் போகச் செய்யும் இந்த முயற்சியாகும். இப்படி சட்டங்களை திருத்துவதன் மூலமாகவும், புதிய சட்டங்களை அவர்களது திட்டங்களுக்கேற்ப உருவாக்குவதன் மூலமாகவும் இந்திய அரசியல் சட்டத்தை செயலிழக்க செய்து புதிய மதவாத இந்துராஸ்டரத்தை உருவாக்கும் முயற்சியின் வெளிப்பாடாகத்தான் இதனைக் கருத முடிகிறது.

எனவே, பன்முகத்தன்மை கொண்ட இந்திய ஒன்றியத்தை கட்டுக்குழையாமல் ஒற்றுமையுடன் பாதுகாப்பதற்கு இந்திய ஒன்றியத்திலுள்ள அனைத்து மக்களும் ஓரணியில் ஒன்றுதிரண்டு இந்திய பன்முகத்தன்மையைக் காப்பாற்ற வேண்டும் என்பதே ஒன்றிய மதவாத பா.ஜ.க. அரசு இந்தச் சட்டத்தின் மூலம் நமக்கு உணர்த்தும் பாடமும் படிப்பினையுமாகும்.

மலேசியா தளபதி பேரவை சார்பில் காணொலிக் கருத்தரங்கம்!

கோலாலம்பூர், டிச. 25-

மலேசியா தளபதி பேரவை சார்பில் காணொலிக் கருத்தரங்கம் எஸ்.அபீபா திருப்பூர் தெற்கு மாவட்டம். மகளிர் அணி துணை அமைப்பாளர் தலைமையில் நடைபெற்றது. மக்கள் போற்றும் திராவிட மாடல் அரசு என்கின்ற தலைப்பில். கடலூர் இள.புகழேந்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் தொகுப்புரை பொருளாளர் ஜே. சிவானந்தம் வரவேற்புரை காஞ்சிபுரம் நித்யா டீச்சர் நிஜாம்கான், யாசிர் அரஃபாத், முருகன், ஜெகதீசன், மணிவண்ணன். ராஜேஷ், செந்தில் குமார், பூபாலன், பிரபு, நாகேந்திரன், பூர்னி யம்மாள், த.மு.மு.க. நஜுர் முகமது உசேன், விசிக. தன்ராஜ், சாகுல் ஹமீது, செல்லப்பா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அன்வர் ராஜா, முத்தலீப், வாழ்வுரிமைக் கட்சி ஜெகதீசன், முரளிதரன், பாட்ஷா, அசாருதீன், வரகனேரி டைட்டானிக் ரமேஷ், ஒருங்கிணைப்பாளர் உமர்ஷா, துணைச் செயலாளர் முகவை சக்திவேல், சாதிக் வரகனேரி மகளிர் அணி பாத்திமா, மகாலட்சுமி, இளைஞர் அணி ஷாஜகான், ரவிக்குமார், கலையரசன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செயலாளர் ஹச்.எம். ஜெய்னுதீன் மற்றும் ஏராளமான கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

முடிவில் எம்.இக்பால்ஷா நன்றி உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 101அ வட்டத்திற்குட்பட்ட பாகம் 94,95,96,97,98,99,124 ஆகிய எண்களில் வட்டக் கழக செயலாளர் சி.பி.திருமலை தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சியில் அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம், மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் மற்றும் வட்ட பாக ஒருங்கிணைப்பாளர் ச.அசோக்குமார் சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் வே.ப.தங்கமணி, எம்.ஏ.டேனியல், பழனிவேல்ராஜன், ஆனந்தி முரளி, எம்.டி.சாமிராஜன், மாவட்ட பிரதிநிதி பாலாஜி, வழக்கறிஞர் அணி விஜயகுமார் மற்றும் BLA2,BDA,BYO,BLC நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.